# SALE NOTICE FOR SALE OF IMMOVABLE PROPERTIES

## HOUSING DEVELOPMENT FINANCE CORPORATION LTD.

BRANCH : HDFC HOUSE, No.29, KAMARAJ ROAD, NEAR CIRCUIT HOUSE, COIMBATORE - 641 018
TEL: (0422) 4301152, 4301154 FAX : (0422) 2222530 CIN L70100MH1977PLC019916 Website: www.hdfc.com

Auction Sale Notice of 30 days of Immovable Assets under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 read with proviso to Rule 8 (6) of the Security Interest (Enforcement) Rules, 2002.

Notice is hereby given to the public in general and in particular to the Borrower (s) indicated in Column (A) that the below described immovable property(ties) described in Column (C) mortgaged/charged to the Secured Creditor, the possession of which has been taken as described in column (D) by the Authorised Officer of Housing Development Finance Corporation Limited (HDFC Ltd) Secured Creditor, will be sold on "As is where is", "As is what is", and "Whatever there is" Condition and with encumbarances if any basis as per the details mentioned below :

Notice is hereby given to Borrower / Mortgagor(s) as the case may be, indicated in Column (A) under Rule 8(6) of the Security Interest (Enforcement) Rules 2002.

For detailed terms and conditions of the sale, please refer to the link provided in Housing Development Finance Corporation Limited (HDFC Ltd) Secured Creditor's website i.e. www.HDFC.Com or visit at Branch : HDFC Limited, No.56/4, 1st Floor, MSRK Tower, Bharathi Park, 2nd Cross, Saibaba Colony, Coimbatore - 641 011.

| S.No | Name/s of Borrower(s) and Address | Outstanding dues to be recovered (Secured Debt) (Rs.)* | Description of the Immovable Property | Type of Possession | Reserve Price (Rs.) | Earnest money deposit (Rs.) | Date(s), Time & Place of OpeningTender(s) |
|---|---|---|---|---|---|---|---|
| | (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) |
| 1 | **Mr. Manojkumar M**<br>Sri Sai Castle, Flat-4, 1st Floor, Unit-4 V.O, Nagar, Vadavalli, Coimbatore-641041<br>**Also at :** No.19, N S K Arch Street, Selvapuram, Komarapalayam, Coimbatore-641026 | **Rs.40,17,562/- as on 31.12.2020*** | All the part and parcel of Flat building situated at Coimbatore Registration District, Vadavalli Sub Registration District, Perur Taluk, Vadavalli Village, S.F. No.187/1, Apartment known as "Sri Sai Castle", V.O Nagar, Site No.22, Apartment Flat No-4 on the First Floor, measuring super built up area of 1236 Sq.ft with car parking, Undivided share of land admeasuring 488 Sq.ft or 45.35 Sq.mtr out of 2440 Sq.ft or 226.68 Sq.mtr or 5 cent 262 Sq.ft., with all common pathway easement rights. | Physical possession | **Rs.37,50,000/-** | **Rs.3,75,000/-** | **02.03.2021 (Tuesday) at 10.30 AM (Coimbatore)** |

* together with further interest from **01.01.2021 @ 18%** p.a. as applicable, incidental expenses, costs, charges etc. incurred up to the date of payment and / or realisation thereof.

**NOTE:** To the best of knowledge and information of the Authorized Officer of HDFC Ltd, there are no encumbrances in respect of the above immovable properties / Secured Assets.

1. The particulars in respect of the Immovable Property / Secured Asset specified hereinabove have been stated to the best of the information and knowledge of the Authorised Officer / HDFC Ltd.
2. However, the Authorised Officer / HDFC Ltd shall not be responsible for any error, misstatement or omission in the said particulars. The Bidders are therefore requested in their own interest, to satisfy themselves with regard to the above and all other relevant details / material information pertaining to the abovementioned Immovable Property / Secured Asset, before submitting the bids.
3. Statutory dues like property taxes / cess and transfer charges, arrears of electricity dues, arrears of water charges and other charges known and unknown in respect to the secured assests being sold, shall be ascertained by the Bidder beforehand and the payment of the same shall be the responsibility of the buyer of Secured Assets.
4. Wherever applicable, it is the responsibility of buyer of Secured Assets to deduct tax at source (TDS) @ of 1% of the total sale consideration on behalf of the resident owner (seller) on the transfer of immovable property having consideration equal to Rs.50 Lacs and above and deposit the same with appropriate authority u/s 194 I/A of Income Tax Act.
5. Sale is strictly subject to the Terms, Conditions and Disclaimers stipulated in the prescribed Auction Bid Document, Offer Acceptance Letter, Public Notice , terms and conditions mentioned hereinbelow and any other related documents.
6. The Bid Document can be collected / obtained from the Authorized Officer of Housing Development Finance Corporation Limited (HDFC) having his office at HDFC Ltd, No 29, Kamaraj Road Near Circuit House, Coimbatore- 641018, on any working day during office hours
7. The Bid Document will also be available at site on the respective date fixed for inspection of the Immovable Property / Secured Asset.
8. Properties / Secured Assets are available for inspection on prior appointment.
9. For any assistance related to inspection of the property, or for obtaining the Bid document and for any other queries, please get in contact Telephone Number 0422-4343954 & 957 & 958.
10. Earnest Money Deposit (EMD) amount as mentioned above shall be deposited by the bidders through Demand Draft / Pay Order in Favour of "HDFC Limited" payable at par in sealed envelope and shall be submitted at HDFC Ltd, No 29, Kamaraj Road, Near Circuit House, Coimbatore-641018
11. **The offer amount (to be mentioned in Bid document) shall be above Reserve Price and bidders shall improve their offers in multiples of Bid incremental amount which will be decided and disclosed by the Authorised officer at the time of auction.**
12. The last date of submission of bids in prescribed Bid Documents with all necessary documents and EMD in stipulated manner is on or before a day prior to the date of opening the tender mentioned above in column (G)
13. Incomplete Bid Documents or bids with inadequate EMD amount or bids received after the date indicated at Sr. No 12 hereinabove shall be treated as invalid.
14. Conditional offers shall also be treated as invalid.
15. The auction will be conducted on the date and time indicated in **Column (G).** Bids will be opened on the date and time indicated in Column (G) in the presence of the Authorised Officer.
16. The bidders or their duly authorized representatives may choose to remain present on the day and time fixed for opening the bids, inter alia, for negotiations / raising / revising / improving their respective bids /offers.
17. The Immovable Property / Secured Asset shall not be sold below the **Reserve Price.**
18. On sale of the property the purchaser shall not have any claim of whatsoever nature against HDFC Ltd or its Authorised Officer.
19. It shall be at the discretion of the Authorised officer to cancel the auction proceeding for any reason and return the EMD submitted and HDFC Ltd will not entertain any claim or representation in that regard from the bidders.
20. The Authorized officer has the absolute right to accept or reject the highest and / or all Bid(s) or postpone or cancel the sale, as the case may be without assigning any reasons thereof and also to modify any of the terms and condition of this sale without prior notice.
21. The sale shall be conferred on the highest bidder subject to confirmation by Secured Creditor i.e. HDFC Ltd.
22. EMD of successful bidder shall be adjusted and for all other unsuccessful bidders, the same shall be refunded within 10 days from the date of Auction. The Earnest money deposit will not carry any interest.
23. Along with Bid Documents the Bidder(s) should also attach his/her photo identity proof such as copy of the passport, election commission card, ration card, driving license, copy of the PAN card issued by the Income Tax department etc. and the proof of residence countersigned by the bidder herself/himself.
24. The successful bidder shall be required to pay 25% of the offer amount (including the amount of EMD) immediately **i.e. on the same day or not later than next working day, as the case may be(as per the amended provisions of Rule 9(3) of the Security Interest (Enforcement) Rules, 2002)** on confirmation of offer acceptance by HDFC, failing which the EMD amount remitted will stand forfeited. The balance 75% of offer amount shall be paid within 15 days of confirmation of sale by the Authorised officer. If the balance amount is not remitted within stipulated time the amount of 25% will stand forfeited as per the amended provisions of Rule 9(4) of the Security Interest (Enforcement) Rules, 2002.

**CAUTION NOTE:**

**Prospective purchaser at large are hereby informed that HDFC Ltd and its Authorized Officer does not deal in cash transaction with respect to Immovable Property mentioned in the Auction sale notice.**

**The name and contact details of the agency / broker, if any, authorized by HDFC Limited to deal with sale of Immovable property can be obtained only from the office of HDFC Ltd at the address mentioned above.**

**Date : 21-01-2021**
**Place : Coimbatore**

**AUTHORISED OFFICER**
**HOUSING DEVELOPMENT FINANCE CORPORATION LTD.**

Regd. Office: Ramon House, H T Parekh Marg, 169, Backbay Reclamation, Churchgate, Mumbai- 400020.

# அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

## ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிட்.


HDFC

கிளை : HDFC ஹவுஸ், எண்.29, காமராஜ் ரோடு, சர்க்யூட் ஹவுஸ் அருகில், கோயமுத்தூர் - 641 018

போன் : (0422) 4301152, 4301154 ஃபேக்ஸ் : (0422) 2222530 CIN L70100MH1977PLC019916 Website: www.hdfc.com


2002 செக்யூரிடைஸேஷன் & ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பைனான்சியல் அஸெட்ஸ் & என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிடி சட்டத்தின் கீழ், 2002 செக்யூரிடி இன்டரஸ்ட் அமலாக்க விதி 8(6)–உடன் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான 30 நாள் ஏல விற்பனை அறிவிப்பு.

ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் (HDFC Ltd ) (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அதிகாரம் பெற்ற அலுவலர் அவர்கள், கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட சுவாதீனம் (possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை (பத்தி C) மறு விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) (பத்தி A) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு எப்படி உள்ளதோ அங்கு அப்படி அதே நிலையில்' நிபந்தனையுடன் மற்றும் வில்லங்கம் ஏதேனும் இருப்பின் அடிப்படையில் கீழ்க்கண்ட விபரப்படி விற்கப்படும்.

2002 செக்யூரிடி இன்டரஸ்ட் அமலாக்க விதி 8(6)ன் கீழ், பத்தி A-ல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்) அவர்களுக்கு இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனீந்தோரான ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் (HDFC Ltd) இணையதளத்திலுள்ள – www.HDFC.Com – லிங்க்கினைப் பார்வையிடவும் அல்லது HDFC லிமிடெட், எண்.56/4, முதல் தளம், MSRK டவர், பாரதி பூங்கா, 2வது குறுக்கு, சாயிபாபா காலனி, கோயமுத்தூர் – 641 011 என்ற கிளை முகவரிக்கு நேரில் வரவும்.

| வ. எண். | கடன்தாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி | வரவேண்டிய பாக்கித் தொகை (செக்யூரிடி உள்ள கடன் பாக்கி) ரூ. | அசையாச் சொத்து / பாதுகாக்கப்பட்ட சொத்து விபரம் | சுவாதீன வகை | நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. | முன்வைப்புத் தொகை ரூ. | ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) |
| 1 | **திரு. மனோஜ்குமார் M**<br>ஸ்ரீ சாய் கேஸில், ஃபிளாட்–4<br>முதல் தளம், யூனிட்–4<br>V.O.நகர், வடவள்ளி<br>கோயமுத்தூர் – 641 041<br>**மேலும் :** எண்.19, NSK ஆர்ச் வீதி<br>செல்வபுரம், கொமாரபாளையம்<br>கோயமுத்தூர் – 641 026 | **31.12.2020* தேதி வரை ரூ.40,17,562/–** | கோயமுத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார் பதிவு மாவட்டம், பேரூர் தாலூகா, வடவள்ளி கிராமம், சர்வே எண்.187/1 ல், V.O. நகர், மனை எண்.22, 'ஸ்ரீ சாய் கேஸில்' என்கிற அபார்ட்மெண்ட்டின் முதல் தளத்தின் 1236 சதுரடி தளப்பரப்புள்ள அபார்ட்மெண்ட் ஃபிளாட் எண்.4, கார் நிறுத்துமிடத்துடன், 2440 சதுரடி அல்லது 226.68 சதுர மீட்டர் அல்லது 5 சென்ட் 262 சதுரடியில் 488 சதுரடி அல்லது 45.35 சதுர மீட்டர் பிரிபடாத பங்கு நிலம், அனைத்து பொது வழித்தட பாத்திய உரிமைகளுடன். | **கொள்நிலை (Physical) சுவாதீனம்** | **ரூ.37,50,000/–** | **ரூ.3,75,000/–** | **02.03.2021 (செவ்வாய்க் கிழமை) காலை 10.30 மணி (கோயமுத்தூர்)** |

* இதில் 01.01.2021 தேதியிலிருந்து 18% பின்வட்டி, பிறசெலவுகள், கட்டணங்கள், வசூல் ஆகும் தேதி வரையானதும் சேர்க்கப்படும்.

**குறிப்பு :** மேற்படி அசையா சொத்தின்/பாதுகாக்கப்பட்ட சொத்தின் பேரில் வில்லங்கங்கள் இல்லையென்று, தான் நன்கு அறிந்த வகையிலும், தகவலின் அடிப்படையிலும் HDFC அதிகாரப்பூர்வ அதிகாரி அறிவிக்கிறார்.

1. இதில் குறிப்பிட்டுள்ள அசையாச்சொத்து/பிணையச்சொத்து விபரங்கள் எச்.டி.எப்.சி வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் அறிந்த மற்றும் தெரிந்த வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
2. ஆயினும் இதில் காணப்படும் தவறுகள், தவறான அறிக்கைகள் அல்லது விடுபாடுகளுக்கு எச்.டி.எப்.சியின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் பொறுப்பாகமாட்டார். ஏலதாரர்கள் மேற்குறிப்பிட்டுள்ள அசையாச்சொத்து/பிணையச்சொத்து குறித்த தகவல்கள் அல்லது மேற்கொண்டு விவரங்களை தாங்கள் திருப்தியுறும் வகையில் சொந்தமுயற்சியில் ஏலக்கேட்பு சமர்ப்பிக்கு முன்னதாகவே விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும்.
3. பிணையத்திற்குட்பட்ட விற்பனைக்குரிய சொத்துகளின் மீதான சட்டபூர்வ நிலுவைகள் ஏதேனும் சொத்து வரி/தீர்வை, மாற்றல் கட்டணங்கள், மின் கட்டண நிலுவை, குடிநீர்க் கட்டண நிலுவை போன்ற பிற நிலுவைகள் தெரிய வந்தவை மற்றும் தெரியவராதவைகள் குறித்து ஏலதாரர் முன்னமே அறிந்திருப்பதுடன் அவை பிணையப்படுத்தப்பட்ட சொத்துகளை வாங்குபவரது பொறுப்பாகும்.
4. வருமானவரிச் சட்டம் பிரிவு 194/1Aன் கீழ் தேவை ஏற்படும் இடத்தில் பாதுகாக்கப்பட்ட சொத்துகளின் மீதான மூலாதாரவரிப்பிடித்தம் (TDS) 1% வீதத்தில் மொத்த விற்பனைத் தொகைக்கும் (குடியிருப்பு உரிமைதாரர்) விற்பனையாளர் சார்பாக விற்பனைத் தொகை ரூ.50 லட்சம் அல்லது அதற்கு மிகும்போது அசையாச் சொத்துகளின் மாறுதலுக்கென பிடித்தம் செய்து சமர்ப்பிக்க வேண்டியது வாங்குபவரின் பொறுப்பாகும்.
5. விற்பனை குறித்த விதிகள், நிபந்தனைகள் மற்றும் உரிமை தொடர்பாக ஏல ஒப்பந்த ஆவணம், கேட்பு, ஒப்புதல் கடிதம், பொது அறிவிப்பு பிற நிபந்தனைகள் விதிகள் ஆகியவை கண்டிப்பாகக் கடைபிடிக்கப்படும். இது தொடர்பான பிற ஆவணங்களும் பரிசீலிக்கப்படும்.
6. ஏல விண்ணப்பம் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பொரேஷன் லிட் (எச்.டி.எப்.சி)யின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து அவரது அலுவலகமான எச்.டி.எப்.சி, எண் 29, காமராஜ் ரோடு, சுற்றுலாமாளிகை அருகில், கோயம்புத்தூர் –641018 என்ற முகவரியில் எந்த ஒருவேலை நாளிலும், வேலை நேரத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.
7. மேற்குறிப்பிட்ட அசையாச்சொத்து/பிணையச்சொத்தின் அமைவிடத்தில் அதனைப் பார்வையிடும் நாளன்றும் ஏல ஆவணங்கள் கிடைக்கப் பெறும்.
8. சொத்துகள்/பிணையச்சொத்துகள் முன் அனுமதி பெற்றுப் பார்வையிட்டுக்கொள்ளலாம்.
9. சொத்துகள் பார்வையிடல் அல்லது ஏல ஆவணங்களைப் பெறுதல் அல்லது வேறு ஏதேனும் தகவல் பெற தொலைபேசி எண். 0422–4343954 மற்றும் 957 & 958–ஐ தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.
10. குறைந்தபட்ச மேற்குறிப்பிட்ட ஏல வைப்புத்தொகை (EMD) செலுத்தவுள்ள ஏலதாரர்கள் அதனை "HDFC லிமிடெட்" பெயரில் கொடு ஆணை அல்லது கேட்புவரைவாக எவ்விடத்திலும் மாற்றத்தக்க வகையில் (at par) மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு HDFC லிட், எண் 29, காமராஜ் சாலை, சுற்றுலாமாளிகை அருகில், கோயம்புத்தூர் 641018 என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும்.
11. ஏலக் கேட்புத்தொகை (ஏல ஆவணத்தில் குறிப்பிட வேண்டியது) நிர்ணய விலைக்கும் அதிகமாக இருக்க வேண்டும் என்பதோடு அவை குறிப்பிட்ட ஏல உயர்வுத் தொகையின் மடங்கிலேயே இருக்க வேண்டும். இதனை அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஏல நேரத்தில் முடிவெடுத்து அறிவிப்பார்.
12. முறையான ஏல விண்ணப்பப் படிவத்துடன் தேவையான ஆவணங்கள் மற்றும் குறைந்தபட்ச வைப்புத் தொகை ஆகியவை ஒழுங்கான முறையில் படிவத்தில் குறிப்பிட்டுள்ள இறுதி நாளன்றோ அல்லது பத்தி 'G' யில் குறிப்பிட்டுள்ள ஏலத்தேதிக்கு ஒரு நாள் முன்னதாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.
13. முறையாகப் பூர்த்தி செய்யப்படாத ஏல ஆவணங்கள், ஏலப்புள்ளிகள் அல்லது குறைவான வைப்புத்தொகை (EMD)யுடன் வரும் விண்ணப்பங்கள் அல்லது வரிசை எண் 12ல் குறிப்பிட்ட நாளுக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் தகுதியற்றவை எனக்கருதப்படும்.
14. நிபந்தனையுடன் கூடிய கேட்பு விண்ணப்பங்களும் தகுதியற்றவை எனக்கருதப்படும்.
15. அறிவிப்பின் 'G' பத்தியில் சொல்லப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் ஏலம் நடைபெறும். ஏலக்கேட்புகள் மேற்சொன்ன 'G' பத்தியில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் முன்னிலையில் திறக்கப்படும்.
16. ஏலதாரர்கள் அல்லது முறையாக அங்கீகரிக்கப்பட்ட அவர்தம் பிரதிநிதிகள் ஏலக்கேட்பு திறக்கப்பட உள்ள நேரத்தில் அவர்கள் தமது கேட்பு குறித்த ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும்/எழுப்பவும்/மாற்றவும்/அபிவிருத்தி செய்து கொள்ளவும் ஆஜராகி இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
17. அசையாச்சொத்து/பிணையச்சொத்து நிர்ணய விலைக்கும் குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது.
18. சொத்தினை வாங்குபவர் சொத்தின் விற்பனை குறித்து எச்.டி.எப்.சி லிட் வங்கி அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் குறித்து எத்தன்மையதாக இருப்பினும் எவ்வித உரிமைகளையும் கோர இயலாது.
19. ஏலத்தை எந்தவொரு காரணத்திற்காகவும் ரத்து செய்வதோ அல்லது சமர்ப்பிக்கப்பட்ட குறைந்தபட்ச வைப்புத் தொகையைத் திரும்பத் தருவது குறித்தோ எந்த ஒரு கோரிக்கையும் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் பரிசீலனைப் படியே முடிவு மேற்கொள்ளப்படும். மேலும் இது குறித்து எந்த ஒரு கோரிக்கைகளும் ஏலதாரரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
20. இந்த ஏலவிற்பனையை எவ்வித முன்னறிவிப்புமின்றி எந்த ஒரு காரணமும் காட்டாது ரத்து செய்யவோ, தள்ளிவைக்கவோ அன்றி அதிகபட்ச விலைப்புள்ளியை அல்லது அனைத்து விலைப்புள்ளிகளையும் ஏற்கவோ, மறுக்கவோ அல்லது ஏலத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளில் திருத்தம் மேற்கொள்ளவோ அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் முழு உரிமையுடையவராவார்.
21. பாதுகாக்கப்பட்ட கடன் ஈந்தவர் அதாவது எச்.டி.எப்.சி லிட் நிறுவனத்தின் உறுதி செய்தலுக்குப் பின்னரே அதிகபட்ச ஏலம் கோரிய நபருக்கு ஏலம் உறுதி செய்யப்படும்.
22. வெற்றிபெற்ற ஏலதாரரது குறைந்தபட்ச வைப்புத்தொகை, ஏலத்தொகையில் சரிசெய்யப்படுவதோடு, மீதமுள்ள பிற ஏலதாரர்களது தொகை ஏல நாளிலிருந்து 10 நாட்களுக்குள் திருப்பி அளிக்கப்படும். குறைந்தபட்ச வைப்புத் தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.
23. ஏல ஆவணங்களுடன், ஏலதாரர்கள் தங்களது புகைப்பட அடையாளச் சான்று அதாவது கடவுச்சீட்டு, தேர்தல் ஆணைய அட்டை, குடிமைப்பொருள் அட்டை, ஓட்டுநர் உரிமம், வருமான வரித்துறையால் வழங்கப்பட்ட நிலைக்கணக்கெண் (PAN) அட்டை ஆகியவற்றில் ஒன்றுடன் ஏலதாரர் சுய மேலொப்பமிட்ட குடியிருப்புச் சான்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.
24. வெற்றிபெற்ற ஏலதாரர் கேட்புத்தொகையில் 25% (குறைந்தபட்ச வைப்புத்தொகை சேர்த்து) தொகையை உடனே அதாவது அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்குமிகாமல் தகுந்தவாறு (பிணைய நலன் அமலாக்க விதிகள் 2002 விதி 9(3)ல் கண்ட திருத்தப்பட்ட விதிகளின்படி) எச்.டி.எப்.சி நிறுவனத்தின் கேட்பு உறுதி செய்யப்பட்டவுடன் செலுத்திவிட வேண்டும். தவறினால் அவர் தமது குறைந்தபட்ச வைப்புத் தொகை (செலுத்தியது)யை இழந்துவிட நேரிடும். மீதமுள்ள 75 சதவீதத்தொகை அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் உறுதி செய்த 15 நாட்களுக்குள் செலுத்தப்பட்டுவிட வேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் மீதத்தொகை செலுத்தவில்லையெனில் பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002 விதி 9(4)ன் திருத்தப்பட்ட சரத்துகளின்படி அவர்தாம் செலுத்தியுள்ள 25 சதத்தொகையை இழக்க நேரிடும்.

**எச்சரிக்கை அறிவிப்பு:–**

சொத்தினை வாங்க உத்தேசித்துள்ளவர்க்கு, எச்.டி.எப்.சி லிட் நிறுவனம் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் இவ்வேல அறிவிப்பில் கண்ட அசையாச் சொத்து விற்பனை தொடர்பான எந்தவித ரொக்கப் பரிவர்த்தனையிலும் ஈடுபடமாட்டார் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு ஏதேனும் ஏஜென்சி/புரோக்கர் எச்.டி.எப்.சி லிட் நிறுவனத்தால் இந்த அசையாச் சொத்து விற்பனைக்கு அங்கீகாரமளிக்கப்பட்டிருந்தால் அவர்களது பெயர்/தொடர்பு விபரங்கள் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியிலுள்ள எச்.டி.எப்.சி லிட் நிறுவனத்தின் அலுவலகத்தில் மட்டுமே கிடைக்கப்பெறும்.

**தேதி : 21–01–2021**
**இடம் : கோயமுத்தூர்**

**அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்**
**ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**


பதிவு அலுவலகம் : ரமோன் ஹவுஸ், எச்.டி.பரேக் மார்க், 169, பேக்பே ரெக்லமேஷன், சர்ச்கேட், மும்பை – 400 020